
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 17, 2021 Weekly E-paper • July 17, 2021

# மேகதாது

## - நமது உரிமைப் பறிப்பு

முனைவர் பூ.மணிமாறன்

## ‘நீட்’ விரைந்து விலக்கு பெறுவோம்!

தலையங்கம்

## திமுக ஆட்சியின் திராவிடக் கொள்கை வழிச் செயல்பாடு

பேராசிரியர் வெ. சிவப்பிரகாசம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 17, 2021

Weekly E-paper • July 17, 2021




# மேகதாது - நமது உரிமைப் பறிப்பு

முனைவர் பூ.மணிமாறன்

தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சனையானக் காவிரி நதிநீர்ப் பிரச்சனையில் தமிழகத்தின் உரிமைகளை ஒன்றிய அரசும், கர்நாடக அரசும் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றன. நடுவர்மன்றத் தீர்ப்பின்படி தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நீர் உரிய அளவில், உரிய நேரத்தில் கிடைக்கவில்லை. அதற்கான எவ்வித முயற்சிகளையும் ஒன்றிய அரசு இதுவரை காவிரி நடுவர் மன்றம் ஆணையிட்டதில் இருந்து மேற்கொள்ளவே இல்லை. மேலும் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட இதுவரை எந்த முயற்சியும் ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்படவில்லை.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாட்டு, ராசிமணல் ஆகிய இடங்களில் இரண்டு அணைகளைக் கட்டும் முயற்சியில் கர்நாடக அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இதனால் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான காவிரி நீர் தடுத்து நிறுத்தப்படும் அபாயமும், இதனால் தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்கள் பாலைவனமாகும் அபாயமும் ஏற்பட்டிருக்கிறது. காவிரி டெல்டா மாவட்டங்கள் மட்டுமின்றி சென்னை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை, நாமக்கல், அரியலூர், பெரம்பலூர், கடலூர், ஈரோடு, திருப்பூர், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களின் குடிநீர் ஆதாரமும் பாதிப்புக்குள்ளாகும். நேரடியாகவும், மறைமுகமாகவும் 5 கோடி தமிழக மக்களின் இயற்கை உரிமை பறிக்கப்படும் நிலை தடுக்கப்பட வேண்டியது அவசர அவசியமாகும். தமிழகத்திற்குத் தரவேண்டிய நீரைத் தரமறுக்கும் கர்நாடக அரசு இப்போது வந்துகொண்டிருக்கும் நீரையும் முடக்கும் முயற்சிகளை ஒன்றிய அரசின் மறைமுகத் துணையோடு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மேகதாட்டு அணை என்றால் மேக = ஆடு + தாட்டு என்றால் = தாண்டும் காவிரி = ஆடு தாண்டும் காவிரி என்றுதான் பொருள். அவ்வளவு குறுகிய இடத்தைக் கூடவிடாமல், கர்நாடகம் தமிழகத்துக்கு நீர்வரக்கூடிய எல்லா வழிகளையும் அதற்கே வைத்துக் கொள்ள எத்தனிக்கிறது. மேகதாட்டு அணை, கிருஷ்ணராஜ சாகாரைவிடப் பெரிதாக இருக்கும் என்கிறார்கள். கர்நாடகத்தில் 1918-1920 வாக்கில் கட்டப்பட்டது கிருஷ்ணராஜசாகர் அணை. அந்த அணையைத் தவிர, மேற்கொண்டு காவிரியின் குறுக்கே கர்நாடகம் புதிய அணையைக் கட்ட வேண்டுமானால், அதற்கு ஒன்றிய அரசின் அனுமதியைப் பெறவேண்டும்; அத்துடன் காவிரியின் கீழ்மடையிலுள்ள தமிழ் நாட்டு அரசின் ஒப்புதலையும் பெறவேண்டும்.

ஆனால் கர்நாடக அரசு கபினி அணையை 1959இல் கட்டியது. ஏரங்கி அணையைக் 1964இல் கட்டியது. 1965இல் சுவர்ணவதி அணையைக் கட்டியது. 1968இல் ஏமாவதி அணையைக் கட்டியது. இவ்வாறு அணைகளைத் தன்னிஷ்டத்திற்குக் கட்டிக் கொண்டே உள்ளது. 29.6.2017 அன்று கர்நாடகம் ஏறக்குறைய ஒரு மணிக்கு மூவாயிரம் கனஅடி நீர் விடுவதாக அறிவித்தது. ஆனால், 05.07.2017 வரையில் காவிரி நீர் ஒகேனக்கல் அணைக்கே வந்துசேரவில்லை. இது பற்றி பிரதமருக்குக் கடிதம் எழுதுவதோடு அன்றைய தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நிறுத்திக் கொண்டார்.

இந்த நிலையில் காவிரியின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் 900 கோடி ரூபாய்ச் செலவில் புதிதாக அணை ஒன்றைக் கட்ட கர்நாடகம் முயற்சி செய்து வருகிறது. அந்த அணை கட்டப்பட்டுவிட்டால், தமிழ்நாட்டுக்கு இப்போது கிடைக்கும் சிறிதளவு தண்ணீர் கூடக் கிடைக்காது என்பதால், மேகதாது அணைத் திட்டத்திற்குத் தமிழக அரசும், தமிழகத்தில் உள்ள அனைத்து எதிர்க் கட்சிகளும் கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில்தான் பெங்களூருவில் பேசிய கர்நாடக முதலமைச்சர் மேகதாது அணைக்கட்டுத் திட்டம் பற்றி, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு விட்டதென்றும், மழைக் காலத்தில் கடலில் கலக்கும் உபரி நீரைப் பயன்படுத்த இந்த அணை கட்ட

தொடர்ச்சி மறுபக்கம்



## முன்பக்கத் தொடர்ச்சி...

முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த அணையில் இருந்து 400 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படும் என்றும் பேசியிருக்கிறார்.

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புப்படி கர்நாடக அரசு, தமிழ்நாட்டிற்கு, ஆண்டு தோறும் 192 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும். இதனை 12 மாதங்களிலும் பகிர்ந்து வழங்க வேண்டுமென்று தீர்ப்பிலே கூறப்பட்டுள்ளது. ஆனால் கர்நாடக அரசு இதனைக் காதில் போட்டுக் கொள்ளாமல், அங்குள்ள அணைகள் நிரம்பியவுடன் உபரி நீரை மட்டுமே தமிழகத்திற்கு வழங்கி வருகிறது. அந்த நீரிலும் கர்நாடக அரசு தனது பாசனப் பரப்பை 11.20லட்சம் ஏக்கர் பரப்பிலிருந்து 21.71லட்சம் ஏக்கராகக் கூட்டியிருகிறது. நமது பங்கீடான 67.3டிஎம்சி நீரை ரூ.900கோடி செலவில் மேகதாது அணைக்கட்டைக் கட்டுகிறது. இதனால் டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் குறுவையை இழந்து தற்போது சம்பாவையும் இழந்து பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரை, மேகதாது பிரச்சினையில் மாநிலத்தை ஆளும் பாஜக, ஒன்றிய அரசை நடத்தும் பாஜக, உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரே நோக்கத்தோடு, ஒன்றிணைந்திருக்கிறார்கள். ஆனால் இதுவரை அன்று முதல் இன்று வரை பொதுப்பணித் துறையை வைத்திருந்த இன்றைய எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வாய் திறக்காதது வியப்பை அளிக்கிறது.

மேகதாது அணைக் கட்டப்படுவதால்,

1. தமிழக நீர்ப் பாசனத்திற்குத் தேவையான நீரானது மோசமான முறையில் பாதிக்கப்படும்.

2. மேட்டூர் குகை - மேட்டூர் அணை - கீழ்மேட்டூர் அணை, 1 முதல் 4 வரை ஆகிய புனல் மின் நிலையங்கள் பாதிக்கப்படும்.

3. மேகதாது அணை கர்நாடகா பகுதியில் இருப்பதால், அதிலிருந்து வரும் நீரோட்டத்தைத் தமிழகம் எவ்வகையிலும் உறுதிப்படுத்த இயலாது.

4. மேகதாது அணை கட்டப்பட்டால், கர்நாடகத்தின் குடிநீர் தேவைக்கும் பயன்படுத்த, இந்த அணையிலிருந்து நேரிடையாக நீர் பெறும் வாய்ப்பு உள்ளது. இதை தமிழகம் எவ்வகையிலும் தவிர்க்க இயலாது.



5. பெங்களூரு குடிநீருக்காக, காவிரியிலிருந்து 28 டி.எம்.சி. நீரைப் பயன்படுத்த, கர்நாடகா மின் கழகம் அறிக்கை அளிக்கிறது. பருவநிலை அல்லாத காலங்களில் மேகதாது அணையிலிருந்து 16.1 டி.எம்.சி. நீரை பயன்படுத்துவார்கள்.

இப்படி பல தீங்குகள் இடர்பாடுகள் மேகதாது அணை கட்டுவதால் ஏற்படும் நிலை உள்ளது.

மேலும் காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக 1984ல் ரங்கநாதன் தொடுத்த வழக்கின் தீர்ப்பு வந்தது. அதன் அடிப்படையில் காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் தமிழ்நாடு அல்லது கர்நாடகா, கேரளா என எந்த மாநிலம் அணை கட்டுவதாக இருந்தாலும், அதற்குக் காவிரி மேலாண்மை ஆணையத்தின் ஒப்புதல் தேவை. அந்த ஆணையத்தில் தென்மாநிலங்களின் உறுப்பினர்கள் உள்ளனர். 30 ஆண்டுகளுக்கு மேலாக வழக்கு நடத்தி உச்சநீதிமன்றத்தில் நாம் பெற்ற தீர்ப்பால் காவிரி நதிநீர் முறையான வகையில் பங்கிட்டுத்தர வேண்டும் என்ற நடைமுறை வந்துள்ளது. மேலும் காவிரி நதி மீதான எந்தவிதமானக் கட்டுமானம் செய்வதாக இருந்தாலும் நான்கு மாநிலங்களின் ஒப்புதலும் வேண்டும். தற்போது மத்திய அரசு கொடுத்துள்ளதாகக் கூறப்படும் ஒப்புதல் உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது, தீர்ப்பின் அடிப்படையில் அணைகளின் நீர் நிர்வாகத்தைக் காவிரி மேலாண்மை வாரியத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொணரவேண்டும். இதனை ஒட்டியே தமிழக அரசு கூட்டிய அனைத்துக் கட்சி கூட்ட முடிவிலான தீர்மானமும் சொல்கிறது.முதல் கட்டமாக கோரிக்கை மனு அளிப்பது , அது பயன்தரா பட்சத்தில் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் வழக்கு உள்ளிட்ட சட்டப்பூர்வ நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்வது என தீர்மானம் கூறுகிறது. அந்த அடிப்படையில் உச்சநீதிமன்ற தீர்ப்பின் வழிகாட்டுதல்படி தன்னாட்சி அதிகாரமிக்க காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க ஆவண செய்ய வேண்டும்.

மேகதாதுவில் அணை கட்டினால், அது தமிழகத்தைப் பாலைவனமாக மாற்றிவிடும். 25லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் பாதிப்புக்குள்ளாகும். அதில் வசிக்கும் ஐந்து கோடி மக்கள் பாதிப்புக்கு உள்ளாவார்கள். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை அனைத்து மாநிலங்களும் பின்பற்றவேண்டும். அதேபோல மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமும் இந்தத் தீர்ப்பைப் பின்பற்றவேண்டும். ஆனால் இந்த விவகாரத்தில் ஒன்றியஅரசு தமிழத்தை வஞ்சிக்கிறது. இந்தத் திட்டம் குறித்து கலைஞர் கருணாநிதி அவர்களின் வழிகாட்டுதலான காவிரி நடுவர் மன்றம் அதன் மூலமான காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம் மட்டுமே முடிவு செய்ய முடியும். ஆனாலும் இன்றைய தமிழ்நாடு அரசின் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்து மேற்கொண்டு வரும் அனைத்து நடவடிக்கைகளும் வரவேற்க வேண்டிய ஒன்றாகும். ●


# கருஞ்சட்டைப் பதிப்பகம்

**இணையத்தள விற்பனை (online sales)**

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com



**இராம. வைரமுத்து**

**இரண்டு ஆண்டுகளுக்கு முன்
இளைஞர் அணியின்
தலைமை ஆனாய்
இயக்கம் முழுமைக்கும்
இதயம் ஆனாய் !**

**கலைஞர் படையின்
இளைஞராய் உன் அறிமுகம் !**

**இளைஞர் படையின்
கலைஞராக உன் திருமுகம் !**

**அய்யா, அண்ணா, கலைஞர் வழியை
அடியொற்றினாய்
பின்பற்றினாய்
தளபதி ஸ்டாலின் போல்
தமிழ்நாடு முழுவதும்
சுழன்றாய் !**

**கலைஞரின் பேரனாக
கழகத்தின் வீரனாக
பரப்புரைக் களம் சென்றாய்
பகை வென்றாய் !**

**ஒற்றைச் செங்கலை
உருவினாய்
ஓர் அரசாங்கமே சரிந்தது !**

**நீ இளைஞர் அல்ல
இரண்டாம் கலைஞர் !**

**உன்னால்
இயக்கத்திற்கு
புது ரத்தம் பாய்ந்தது
எதிரிகள் கூட்டம்
சாய்ந்தது !**

**"தாத்தா பேரை
எடுத்திடு தம்பி" - எனத்
தமிழ்நாடே வாழ்த்துது உன்னை நம்பி !**

**இளைஞர் அணியில்
மூன்றாம் ஆண்டில்
இன்று
உதிக்கும் சூரியனாய்
உதயநிதியாய்
நாட்டுக்கும்
நம் பேரியக்கத்திற்கும்
நீயே வருங்காலம்
பெருமைகள் உனக்கு
வரும் காலம் !!**

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## நீட் - விரைந்து விலக்கு பெறுவோம்!



நீட் தேர்வின் பாதிப்பு குறித்து ஆராய ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த உடனேயே தி.மு. கழகம் ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. அக்குழுவும் பல்வேறுகட்ட ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி கல்வியாளர்கள், ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் கருத்துகளைப் பெற்று ஆய்வறிக்கையை அரசிடம் சமர்ப்பித்திருக்கிறது.

நீதியரசர் ஏ.கே.ராஜன் குழுவின் பணி எளிதில் நடைபெற்றுவிடவில்லை. சட்ட மன்றத்தில் அரசிற்கு ஒத்துழைப்பு தருவதாகச் சொன்ன பாஜகவினர் சில நாட்களிலேயே நீதிமன்றத்தில் இக்குழு அமைக்கப்பட்டதை எதிர்த்து வழக்குத் தொடுத்தனர். தமிழக அரசும் சமூக நீதி காக்கப் போராடும் பல்வேறு இயக்கங்களும் கட்சிகளும் நீதிமன்றத்தில் தொடர்ந்து போராடினர்.

பாஜகவினரின் அவ்வழக்கை நீதிமன்றம் அண்மையில் தள்ளுபடி செய்தது. மாநில அரசின் உரிமைகளில் தலையிட முடியாது என்றும் அந்த ஆணையம் அமைக்கப்பட்டது அரசின் முடிவு என்றும் அதில் நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் சொன்னது.

எனினும் நீட் தேர்வை எப்படியாவது தொடர்ந்து நடத்திவிட வேண்டும் என்பதில் பாஜகவினர் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் இப்படி சட்டத்திற்குப் புறம்பாகவும், ஆட்சி அதிகாரத்தையும் பயன்படுத்தித் தொடர்ந்து இடையூறுகள் செய்து வரும் வேளையில் தமிழக அரசு விரைந்து நீட் தேர்விற்கு விலக்கு பெற்றிட வேண்டும் என்பது மட்டுமே சமூக நீதியை நிலைநிறுத்தப் போராடுபவர்கள் அனைவரும் வேண்டுவதாகும்.

அனைத்து வகைகளிலும் திறன்பட செயல்பட்டு இந்தியாவிற்கே முன்மாதிரியாகத் திகழ்ந்துவரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நீட் தேர்விற்கும் விரைந்து விலக்கு பெற்று சமூக நீதியை தமிழகத்தில் நிலைநாட்டும் நாளை நாம் விரைவில் காணவேண்டும் .

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**உதயகுமார்
வெற்றிச்செல்வன்,
சாரதா தேவி**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com
www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்: **suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-2472 6408**

# திமுக ஆட்சியின் திராவிடக் கொள்கை வழிச் செயல்பாடு

## பேராசிரியர் முனைவர் வெ. சிவப்பிரகாசம்

மேனாள் பேராசிரியர், திராவிட இயக்க ஆய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகம்

**10 ஆண்டுகளுக்குப் பிறகு திமுக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருக்கிறது. 4.9 இலட்சம் கோடி கடனில் தமிழ்நாடு இருக்கிறது. இந்தக் கடனைச் சமாளித்து வளர்ச்சி பெற அரசு முன்னெடுக்கும் செயல்பாடுகளை, பொருளாதாரப் பேராசிரியராக எப்படிப் பார்க்கிறீர்கள்?**


பேரா.சிவப்பிரகாசம்

2011ல் இருந்தது ஒரு லட்சம் கோடி கடன். 2011 முதல் 2021 வரையிலான 10 ஆண்டுகளில் 4.9 லட்சம் கோடியாகக் கடன் அதிகரித்துவிட்டது. ஓபிஎஸ் தன்னுடைய கடைசி வரவு செலவுத் திட்ட அறிக்கையில் இது 5.7 லட்சம் கோடி கடனாக வாய்ப்பிருக்கிறது என்று சொல்லியிருந்தார். கடனுக்கான முக்கியக் காரணிகளில் ஒன்றாக மின்சாரத்துறைக்கான செலவு ஆகிவிட்டது. ரூபாய் 3.9 பைசாவிற்கு வாங்க வேண்டிய மின்சாரத்தை 7 ரூபாய் கொடுத்து வாங்கினார்கள். வாங்கிய கடனைவிட அதிகமான வட்டியைக் கட்டி இருந்தால் அதனை 'Debt Trap' கடன் பொறி என்று சொல்லுவார்கள். வெள்ளை அறிக்கை வந்தால் தான் இந்த நிலை எல்லாம் தெளிவாகத் தெரியும்.

ஆனால் கடனை எப்படிச் சமாளிக்க முடியும் என்றால் அதற்கும் பல வழிகள் இருக்கின்றன. குறிப்பாகக் கனிமங்கள் மூலம் கிடைக்கும் வருவாயைப் பன்மடங்கு அதிகரிக்கலாம். ஆனால் இந்த வருவாய் எல்லாம் முழுமையாகவே கணக்கில் வராத வகையில் பல மோசடிகள் நடந்திருக்கின்றன. இது தொடர்பான ஊழல் பட்டியலை நம்முடைய முதல்வர் ஆளுநரிடம் வழங்கியிருந்தார். அதேபோல் பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் ஊழல் பட்டியலை அளித்திருக்கிறார். இந்த இரண்டு பட்டியலின் அடிப்படையில் உண்மையிலேயே நடவடிக்கை எடுத்தால் அதிக வருவாய் ஈட்டலாம். அதேபோல் நம்முடைய உள்நாட்டு உற்பத்தி 3.5% குறைந்திருக்கிறது. மத்திய அரசிடம் இருந்து வந்து கொண்டிருந்த சரக்கு மற்றும் சேவை வரிப் பங்கீட்டிலும் தற்போது பெரிய அளவில் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. நிதித்துறையில் சரியான சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். கடன் வாங்கியது தவறில்லை ஆனால் அதனை வருமானம் வரக்கூடிய முறையான வழியில் செலவு செய்யவில்லை, முதலீடுகளை, உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் செலவு செய்யவில்லை என்று நம்முடைய நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் சொல்கிறார்.

'Austerity Measures' சிக்கன நடவடிக்கைகள் என்று சொல்வார்கள். தேவையற்ற செலவுகளைக் குறைத்துவிட்டு உற்பத்தியைப் பெருக்கும் வண்ணம் செலவு செய்வது. மின்சாரமாக இருக்கட்டும் வேளாண்மையாக இருக்கட்டும் சிறு குறு தொழில் ஆக இருக்கட்டும் போக்குவரத்தாக இருக்கட்டும் சரியான முறையில் நேர்மையாகச் செயல்பட்டால் இழப்பு என்பது இருக்காது. போக்குவரத்துத் துறையில் எல்லாம் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. இந்த நான்கு ஆண்டுகளில் எந்தப் பொறுப்பும் இல்லாமல் ஊதாரித்தனமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் அவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும். ஆகவே அவர்கள்மேல் முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தற்போது இருக்கும் நிதி அமைச்சரின் அனுபவம் திறமை இவற்றை வைத்துப் பார்க்கும் போது அவர் மிகச் சரியாக அனைத்தையும் மேற்கொள்வார் என்பது தெரிகிறது. உலக அளவில் குறிப்பிடத்தக்க வல்லுநர்களைக் கொண்டு ஆலோசனைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதில் எஸ்தர் டஃப்லோ, ஜான் ட்ராசே ஆகியோர் Developmental Economists. அதாவது வளர்ச்சிப் பொருளாதார வல்லுனர்கள். வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்பு இவற்றை பற்றி அவர்கள் சிறந்த ஆலோசனைகள் வழங்கக்கூடும். அதேபோல் ரகுராம்ராஜன் அவர்கள் நிதித்துறை சார்ந்த வல்லுனர். அரவிந்த் சுப்ரமணியம் அவர்களும் சிறந்த பொருளாதார வல்லுநர். அவர் வளர்ச்சி சதவீதம் பற்றி சிறந்த வகையில் ஆய்வு செய்பவர். அதே போல் திரு.நாராயன் அவர்களும் நிதித்துறையில் அனுபவம் கொண்டவர். இந்தக் குழு சிறப்பான ஆலோசனைகளை அளிக்கும். ஆகையால் இந்த 'Deficit' பற்றாக்குறை என்பதை நிச்சயமாகச் சமாளிக்க முடியும்.

**ஒன்றிய அரசின் பொருளாதாரக் கொள்கையும், தமிழக அரசின் பொருளாதாரக் கொள்கையும் எப்படி வேறுபடுகிறது?**

ஒன்றிய அரசு சந்தைப் பொருளாதாரம் என்று சொல்லிக்கொண்டு அனைத்தையும் தனியாருக்கு விற்கிறது. HALக்குக் கொடுக்க வேண்டிய ரஃபேல் உற்பத்தியை ரிலையன்ஸ்க்குக் கொடுக்கிறது. இது நிச்சயம் இந்தியப் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்யாது. அதேபோல் அவர்கள் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் வருவாயை அதிகரிக்கும் வகையில் செலவு செய்வதில்லை. இல்லாத சரஸ்வதி நாகரிகத்திற்குப் பல ஆயிரம் கோடியை ஒதுக்குகிறார்கள். தற்போது சென்ட்ரல் விஸ்தாவிற்குப் பல ஆயிரம் கோடியை ஒதுக்கி இருக்கிறார்கள். இவற்றால் நாட்டிற்கு எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை. அதேபோல் 'Trickle Down Effect' என்று சொல்லுவார்கள். பணம் மேலிருந்து கீழ் வருதல். இது ஒரு தோல்வியான திட்டமாகும். இந்தியா போன்ற சாதியக் கட்டமைப்பு உள்ள நாடுகளில் கீழ்நோக்கி பணம் செல்லாது. பல இடங்களில் அது தேங்கி விடும். ஆனால் 'Trickle up' என்று சொல்வார்கள். அது உழைக்கும் ஏழை எளிய மக்களிடம் பணத்தைக் கொண்டு போய்ச் சேர்ப்பது. அவர்களுக்கு உரிய ஊதியத்தைக் கொடுத்து வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவது. இதன் மூலம் பொருளாதாரம் வளர்ச்சி அடையும். அந்த வகையில் தமிழ்நாட்டில் வல்லுனர்களுடன் ஆலோசனைகள் நடைபெறுகின்றன என்று முதல்வர் சொல்லியிருக்கிறார். குஜராத் மாடல் என்பது பணக்காரர்களை வளர்த்து விடுவது. 'Dravidian Model' என்பது, இல்லாதவர்கள் வறியவர்கள் இவர்களைத் தூக்கி விடுவது. சாமானியன் தான் நாயகன்.

**திரவிடியன் மாடல் என்பதை எப்படி வரையறுப்பது?**

திரவிடியன் மாடல் என்பது கம்யூனிஸ்ட் இடதுசாரியும் அல்ல முதலாளித்துவ வலதுசாரியும் அல்ல. இந்த இரண்டுக்கும் இடையில் உள்ள ஒரு Social Economics (சமூகப் பொருளாதாரம்). வர்ண தர்மத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு செயல்படுவது ஆரியன் மாடல். அதற்கு எதிரானது Dravidian Model. ஒடுக்கப்பட்ட, நாட்டின் பூர்வ குடிகளை, உழைப்பாளர்களை முன்வைப்பது. வறுமை வேலையில்லா திண்டாட்டம் ஆகியவற்றை பேசுபவர்கள் இடதுசாரிகள்தான். வலதுசாரிகள் அவற்றைப் பேசமாட்டார்கள். அவர்கள் ஆன்மீகம் என்று பேசுவார்கள். அல்லது கொங்குநாடு என்பது போன்ற பிரச்சினைகளைப் பேசி உண்மையான பிரச்சினைகளிலிருந்து திசை திருப்புவார்கள்.

**நேர்காணல் மா. உதயகுமார்**

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,